# கலைஞரும் நானும்

104

**மலையாய் உயர்ந்து நிலையாய்த் திகழ்ந்து இன்று அலைகடல் ஓரம் அண்ணாவிற்கு அருகில், தலைவைத்துத் துயிலும் தலைவர் கலைஞர் அவர்களுடன் எத்தனையோ சந்திப்புகள், என் வாழ்வில்! அத்தனையும் தித்திப்புகள் எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் பேராசிரியர் மா.செல்வராசன்.**



# ‘மாறாத நல்லெண்ணம், நம்பிக்கை!’

**பேராசிரியர் மா.செல்வராசன்**

*1965*-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டம்! மாணவர்களே மறவர்களாய் மாறி, மைய அரசுக்கு எதிராகச் சீறினர்; தடைகளை மீறினர். அந்தப் போரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தனது கனல் பேச்சுகளால், கருத்துகளால் ஆள்பவர்களைக் கலங்க வைத்துக்கொண்டிருந்தார். அப்போது நான், பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் மாணவன். இந்தி எதிர்ப்பு மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்று மகிழ்ந்தவன்.

இளங்கலை இரண்டாம் ஆண்டு படிக்கையில் தமிழ் மன்றச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். மன்றத் தொடக்கவிழாவுக்காக, கலைஞரை அழைக்க வேண்டும் என முதன்முதலில் அவரைச் சந்தித்தேன். மன்றத் தலைவர் பா.மாசிலாமணி உள்ளிட்ட மாணவர்களுடன் கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்றோம். எங்களுடன் பேசிக் கொண்டிருந்த தலைவர், தனக்கு நேரமில்லை என்றும், நாவலரை வைத்து விழாவைத் தொடங்கி விட்டால், நான் தனியாக வந்து உரையாற்றுகிறேன் என்றும் குறிப்பிட்டு உரைக்கான தலைப்பும் தந்தார். எங்கள் களிப்பிற்கு எல்லையே இல்லை; மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தினோம். ‘இவ்வளவு எளிதாகப் பார்க்க முடியும். இனிதாகப் பேச முடியும்’ என்று நாங்கள் எண்ணவே இல்லை! ஆனால், சில காரணங்களால் கலைஞர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கவில்லை.

## மாணவர்களுக்கு உரிமை

1967-ஆம் ஆண்டு பி.ஏ. பட்டம் பெற்றவர்களுள் மிகச் சிறந்தவர் என்ற ‘கல்லூரி விருது’ எனக்குக் கிடைத்தது. அந்த ஆண்டு அதே பச்சையப்பன் கல்லூரியின் தமிழ் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். 1968-ஆம் ஆண்டு, நான் ஏற்பாடு செய்த முத்தமிழ் விழாவிற்குப் பேரறிஞர் அண்ணாவுடன் கலைஞரும் வருகை தந்தார். தவிர, எம்.ஏ; தேர்வில் பல்கலைக்கழக முதன்மையுடன் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்து பொற்பதக்கங்களும் பரிசுகளும் பெற்றேன். கலைஞரைக் கோட்டையில் கண்டு பரிசு பதக்கங்களைக் காட்டியபோது ’கழக மாணவனாய் இருந்து முதன்மை பெற்றது பெருமகிழ்ச்சி ; மற்ற மாணவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு’’ என்று மகிழ்ச்சியுடன் வாழ்த்தினார்.

நான் சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவனாக இருந்தபோது, ஆராய்ச்சி மாணவர் பேரவை ஒன்று உருவாக்கினேன் அதன் சார்பில், மதிப்புறு முனைவர் பட்டம் பெற்ற கலைஞருக்குப் பாராட்டு விழா நடத்த முடிவு செய்தேன். அந்த முயற்சிக்கு, ஆராய்ச்சி மாணவ நண்பர்கள் பலரும் உடன் நின்றனர். அப்போது முதல்வராக இருந்த கலைஞர் அவர்களிடம், நிகழ்ச்சிக்கு இசைவுபெற ஒருநாள் மாலை நேரம் ‘கோபாலபுரம் இல்லம்’ சென்றேன்.

மாடிக்கு என்னை அழைத்த கலைஞர், நிகழ்ச்சி ஒன்றுக்கு புறப்படத் தயாராக இருந்தார். பாராட்டு விழாவிற்கு, நேரம் தருமாறு கேட்டதும், ‘அடுத்த சில நாட்களில் அமெரிக்கப் பயணம். அதற்குமுன் எங்கே நேரம் இருக்கிறது? அமெரிக்கா போய்வந்தபிறகு பார்த்துக் கொள்ளலாம்’ என்று எழுந்து நடந்தார். நான் உடனே, ‘நேரம் தராவிட்டால் இங்கேயே உட்காந்துவிடுவேன்’ என்று முதல்வர் என்றும் பாராமல் கூறினேன். ‘என்னய்யா, எப்போதும் சண்டைதானா? இருக்கிற நெருக்கடியை எடுத்துச் சொன்னாலும் உனக்குப் புரியவில்லை, சரி வருகிறேன்’ என்றார். என்னுடன் வந்தவர்கள் வெல வெலத்துப் போயினர்.



‘முதல்வர் முன் இப்படியா முரட்டுத்தனம் காட்டுவது?’ என்றனர், ஆனால் கலைஞரோ மதிப்புக் குறைவாகக் கருதவில்லை; மாணவர்களை மதிப்பவர். மாணவர்களுக்கு உரிமையுடன் பேச இடம் தருபவர். அதனால், அன்புக் குரலாகவே கேட்டார்!

## ‘நிதி தாரியா?’

அன்று, அவருக்கு நடந்த பாராட்டுவிழா அதி அற்புதமானது. கலைஞர் வருகைக்காக, மூடிக்கிடந்த சென்னை பல்கலைக்கழக செனட் மண்டபத்தைப் புதுப்பிக்கச் செய்தோம்; மேளதாளம், பேண்டுவாத்தியங்களுடன் கலைஞரை வரவேற்றோம். அன்றைய ஒன்றிய நிதியமைச்சர் மோகன் தாரியாவும். உலகப்புகழ் பெற்ற பல பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

ஆராய்ச்சி மாணவர்கள் கலைஞருக்கு அளித்த வரவேற்பையும், கற்றவர்களிடையே கலைஞருக்கு இருந்த மதிப்பையும் கண்டு மோகன் தாரியா வியந்தார். கலைஞர் பேசும்போது, ஒன்றிய அமைச்சரைப் பார்த்து ‘தாங்கள் பெயரிலேயே தாரியா இருப்பது, தமிழ்நாட்டுக்கு மேலும் நிதி தாரியா என்று கேட்கத் தோன்றுகிறது’ என்றார். ஆரவாரத்தில் மண்டபமே அதிர்ந்தது.

> **தலைவர் கொண்டிருந்த நல்லெண்ணம், நம்பிக்கை எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மாறவில்லை என்பதே எனக்கு மிகப்பெரிய ஊக்கம்தான்.**

## மணவிழா நிகழ்வு

எங்கள் மகள் மருத்துவர் வண்ணமலர், மணவிழாவுக்கு வருகை தர கலைஞரும் பேராசிரியரும் ஒப்புதல் அளித்திருந்தனர். கலைஞர் வருகின்றார் என்பதால், காலையில் இருந்தே பரபரப்பு. காவல் கெடுபிடியாக இருந்தது. ஒன்பது மணிக்குப் பேராசிரியர் வந்தார். கலைஞரும் பேராசிரியரும் ஒன்றாக வருவார்கள் என்று கருதிக் ‘கலைஞர் வரவில்லையா?’ என்று கவலையோடு பேராசிரியரிடம் கேட்டேன். ‘மற்றொரு திருமணம் நடத்திவிட்டு வருவார்; என்னை முன்னால் போகச் சொன்னார்’ என்றார். ஒன்பதரை மணிக்கு கலைஞரின் கார் வந்தது.

வாயிலில் கூட்டம் வரவேற்க! காரில் இருந்து இறங்கியதும் கலைஞருக்கு மாலை சூட்டும்போது அவர் கேட்ட முதல் கேள்வி, ‘பேராசிரியர் வரவில்லையா?’ என்பது! ‘அரை மணி நேரம் முன்னதாகவே வந்து விட்டார்’ என்றேன்,‘அவர் திருமணத்தை நடத்தவில்லையா’ என்று அடுத்துக் கேட்டார். ‘என் மகள் திருமணம், தங்கள் தலைமையில் நடத்த வேண்டும் என்று ஆர்வமாக இருக்கும் போது அவர் எப்படி நடத்துவார்?’ என்றேன்.

‘எனக்கு இன்னொரு நிகழ்ச்சி இருக்கின்றது; போக வேண்டாம் என்கின்றாயா’ என்று மறு கேள்வி. ‘அது உங்கள் விருப்பம்’ என்று சொன்னேன். ‘அப்படியானால் இப்படியே போகட்டுமா?’ என்றார். ‘அதுவும் உங்கள் விருப்பம்’ என்று தடுமாறிச் சொல்லிவிட்டேன்.

கலைஞர் விடுவிடென காரில் சென்று அமர்ந்துவிட்டார். நான் அசையாமல் நின்றுவிட்டேன். கூடியிருந்த கூட்டத்தினர் , நண்பர்கள் அனைவரும் ‘தலைவரே! வாருங்கள்’ என்று சத்தமிட்டு அழைத்தனர். அண்ணன் ஆற்காடு வீராசாமி முதல் காவல் அலுவலர்கள் வரை ஒன்றும் தோன்றாமல் நின்றனர். சில வினாடிகள் சென்றதும் கலைஞர் காரிலிருந்து இறங்கி மாடியிலிருந்த மணவிழா அரங்கத்திற்கு வேகமாகப் படியேறினார். நானும் மற்றவர்களும் பின்னால் ஓடினோம்.

கலைஞர் திருமணத்தை நடத்திவைத்து வாழ்த்துரையில், ‘தம்பி செல்வராசன் பேசுவதில் கெட்டிக்காரர்’ என்றார். என்ன பொருளில் குறிப்பிட்டார் என்று எனக்கு விளங்கவில்லை. ‘வைதிகத் திருமணத்தில் சம்பந்திச் சண்டை நடக்கும். அதுபோல நான் கோபித்தது போல் போகட்டுமா என்று காரில் அமர்ந்தேன், அவருடைய நண்பர்களெல்லாம் அலறிப் புடைத்து அழைத்தார்களே தவிர, அப்போதும் தம்பி செல்வராசன் அழைக்கவில்லை, தம்பி தவறு செய்தால், அண்ணன் மன்னிப்பதுதான் அழகு’ என்று வாயிலில் நடந்த நிகழ்ச்சியை வண்ணமாக மாற்றினார்.

## மறக்காத தலைவர்

2008 - பத்தாண்டுகளுக்குப் பிறகு எங்கள் மகன் மருத்துவர் இளங்கதிர் திருமணம். கலைஞர்தான் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். ‘வைகறை மலர்கள்’ என்னும் என்னுடைய கவிதை நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் ‘இளந்தலைமுறையின் நம்பிக்கை நட்சத்தி ரங்களுள் ஒருவர் என நான் செல்வராசனைக் கருதுகிறேன்’ என்று குறிப்பிட்டார். பிறகு, அந்த நூலை அவரே வெளியிட்டார்.

எப்போது போனாலும் என்னைப் பார்ப்பார். என்னைக் குறித்து, தலைவர் கொண்டிருந்த நல்லெண்ணம், நம்பிக்கை எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மாறவில்லை என்பதே எனக்கு மிகப்பெரிய ஊக்கம்தான். கலைஞரின் இந்த நம்பிக்கைக்கு என்ன கடுந்தவம் செய்தேனோ!

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

---

## அறிவற்றவர்களின் பொறுப்பற்ற செயல்!

**த**ந்தை பெரியார் குறித்து, பொறுப்பற்ற புறம்போக்கான பேச்சுக்குப் பலரும் பலவகைகளில் எதிர்வினைகள் புரிந்து வருகின்றார்கள். இது தொடர்பாக, ஆய்வாளர் பொ.வேல்சாமி அவர்களின் முகநூல் பதிவு இது.

“மனசாட்சியே இல்லாமலும் எவ்விதமான சான்றையும் காட்டாமலும் தந்தை பெரியார் மீது அக்கிரமமானதும் அவதூறு நிறைந்ததுமான பழிச்சொல்லை அள்ளி வீசியிருக்கிறார்கள். இவ்வாறான பழிச்சொல்லுக்கு ஆதாரம் காட்டுவதாக அந்த நபரின் அடிவருடிகளில் சிலர் 02.06.1945 குடிஅரசில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரையை எடுத்துக் காட்டுகின்றனர்.


இவர்களால் சுட்டிக் காட்டப்படுகின்ற அந்தக் கட்டுரையில் தந்தை பெரியாரின் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டிற்கான ஆதாரம் எங்கே உள்ளது? அந்த அல்லக்கையர்கள் இக்கட்டுரையின் இறுதி பாராவில் கையாளப்பட்டுள்ள ‘சமயோசிதம்’ என்ற சொல்லுக்குள் தங்களுக்கான ஆதாரம் மறைந்துள்ளது என்கின்றனர். இவ்வாறான எத்தகைய அபத்தத்தையும் எளிதில் நம்பிவிடும் முட்டாள்கள், தங்களிடம் நிறைந்திருப்பதாக அவர்கள் நினைத்துக் கொள்கிறார்களா?

உண்மையில், அந்தப் பேச்சானது ஒரு சிறப்பான மானிடவியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரையாகத்தான் எழுதப்பட்டுள்ளது. மார்க்சிய மூலவர்களில் ஒருவரான ‘எங்கல்ஸ்’ எழுதிய ‘குடும்பம் தனிசொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்’ என்ற நூலிலும் ‘சிக்மண்ட் ஃபிராய்டு’ அவர்களுடைய மனித உளவியல் பற்றிய சிந்தனைகளிலும், தர்ஸ்டனுடைய ‘தென்னிந்திய குலங்களும் குடிகளும்’ (7 தொகுதிகள்) தொகுதிகளிலும் அவரே எழுதியுள்ள இன்னொரு முக்கியமான நூலான ‘தென்னிந்திய மானிடவியல்’ போன்ற சமூக மானிடவியல் சார்ந்த ஆராய்ச்சி நூல்களின் பிழிவாகத்தான் தந்தை பெரியாரின் அந்தக் கட்டுரை அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சமூக மானுடவியல் ஆய்வுக் கட்டுரையைப் புரிந்து கொள்ளக்கூடிய அறிவற்ற மனிதர்களான இத்தகையவர்கள் இந்த நூலில் சொல்லாத ஒரு விஷயத்தை தந்தை பெரியார் சொன்னதாகக் கதைகட்டி கதறுவதை சுய அறிவுள்ளவர்கள் அறிந்து கொள்ளாமல் இருப்பார்கள் என்று நினைத்து விட்டார்களா?’ என்று அந்த நூல்களுக்கான இணையதளச் சுட்டிகளையும் இணைத்துள்ளார். வரலாறு தெரியாத, வாசிப்பும் அற்றவர்களுக்கு இந்தக் குறிப்புகள் சேர வேண்டும்.

---

## ஃப்ளாஷ்பேக்



### ‘குமரியில் தலைவர் கலைஞருடன், தந்தை ஆலடி அருணா’



**ஆலடி எழில்வாணன்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையின் ‘வெள்ளிவிழா’ ஆண்டினை, சமீபத்தில் கொண்டாடியது நம் அரசு. சிலை அமைப்பதற்கு முன்னர், அந்தச் சிறிய தீவை, தலைவர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கியில் பார்வையிடும் காட்சி. அருகில் அப்போது அமைச்சர்களாக இருந்த என் தந்தையார் ஆலடிஅருணா, ரகுமான்கான், ஆற்காட்டார் மற்றும் தலைவரின் இணையர் திருமதி.தயாளு அம்மாள் ஆகியோர் உள்ளனர்.

**- ஆலடி எழில்வாணன், ஆலங்குளம், தென்காசி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### முதல் திராவிட நாடகம்!

1934-இல் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனால் எழுதப்பட்ட ‘இரணியன் அல்லது இணையற்ற வீரன்’ நாடகம் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இதில் இரணியனாக ‘குத்தூசி’ குருசாமி நடித்தார். திராவிட இயக்கத்தின் முதல் நாடகம் இதுதான் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதன்பிறகும் இந்த நாடகம் நடத்தப்பட்டிருந்தாலும், பாரதிதாசனும் ‘குத்தூசி’ குருசாமியும் இணைந்து. அதற்குப்பிறகு நடத்தியதாக செய்திகள் இல்லை.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

718

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.